# Porur Lake Cleaning Project – 2019

The department of Tamil took part in the Porur lake cleaning project, organised by AATTRUPADAI on 14 September 2019. Dr P. Suba Assistant professor in Tamil department and twenty-one students served in the SAVE PORUR LAKE project.



# போரூர் ஏரியில் 3 டன் குப்பை அகற்றம்




■ 'ஆற்றுப்படை' என்ற தன்னார்வ அமைப்பு சார்பில், சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரியான, போரூர் ஏரியில், குப்பை அகற்றும் பணி நேற்று நடந்தது.

**போரூர், ஜூலை 22-**

'ஆற்றுப்படை' அமைப்பினர் சார்பில், போரூர் ஏரியில் இருந்து, 3 டன் பிளாஸ்டிக் குப்பை கழிவுகள் அகற்றப்பட்டன.

சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளில் ஒன்றாக, போரூர் ஏரி, முழுவதும் வறண்டு காட்சியளிக்கிறது.

இந்த ஏரியின் கரைப் பகுதியில், குப்பை கழிவுகள் தேங்கியும், புதர் மண்டியும், சுகாதாரமற்ற நிலையில் காணப்பட்டது.

இதனால், ஏரியை தூர் வாரி ஆழப்படுத்த, நீர்நிலை ஆர்வலர்கள், பொதுப்பணித் துறை அதிகாரிகளுக்கு,




கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில், ஆற்றுப் படை என்ற அமைப்பு சார்பில், 140க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள், நேற்று காலை, போரூர் ஏரியில் உள்ள பிளாஸ்டிக் குப்பையை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

இதில், 3 டன் பிளாஸ்டிக் குப்பை அகற்றப்பட்டது. 24ம் தேதி, ஏரியில் உள்ள கருவேல மரங்களை அகற்றி, தூர் வார, இந்த அமைப்பினர் முடிவு செய்துள்ளனர்.

ஆற்றுப்படை அமைப்பின் தலைவர், கார்த்திகேயன் கூறியதாவது:

எங்கள் அமைப்பின் முகநூல் பக்கத்தில், போரூர் ஏரியை சுத்தம் செய்வது குறித்து, அறிவிப்பு வெளியிட்டோம்.

இதில், 200க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர். பொதுப்பணித் துறை அதிகாரிகளிடம், முறையான அனுமதி பெற்று, இப்பணியை செய்துள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.







